கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

சட்ட பீடம்

சட்டமாணி (சிறப்பு) பட்டக்கற்கை, ஆண்டு I பரீட்சை

இரண்டாம் அரையாண்டு - இறுதிப் பரீட்சை - 2023

## LAW12301– குற்றவியல் சட்டம்

(02 மணித்தியாலமும் 15 நிமிடங்களும்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: **04**

இரண்டு (02) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

01. நன்கு தாபிக்கப்பட்ட மூதுரையான *'actus non facit reum nisi mens sit rea'* இன்படி குற்றஞ் சாட்டப்பட்ட நபரின் தரப்பில் குற்ற உளக்கருத்தின் இருப்பை குற்றமொன்றின் புரிதலானது உள்ளடக்கின்றது. அதற்கிணங்க, குற்றமொன்றின் தனித்தனியான இரண்டு ஆக்கக்கூறுகளானவை உள்ளடக்கின்றதானது: பௌதீக ஆக்கக்கூறு அல்லது குற்றச் செயல் மற்றும் தவறு ஆக்கக்கூறு அல்லது குற்ற மனம். மேலும், குற்றஞ் சாட்டப்பட்ட நபர் மீது குற்றவியல் பொறுப்புடைமையைச் சுமத்துவதற்கு குற்றச் செயலுக்கும் குற்ற மனதுக்கும் இடையே காரணத் தொடர்பொன்றும் தாபிக்கப்படுதல் வேண்டும்.

    மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உமது விடையானது தண்டனைச் சட்டக் கோவையின் பொருத்தமான ஏற்பாடுகள் மற்றும் வழக்குச் சட்டத்தினால் ஆதரிக்கப்படுதல் வேண்டும்.

(30 புள்ளிகள்)

02. இலங்கையையொத்த சட்ட முறைமையைக் கொண்டதோர் அரசான ஷாரிலாந்து, ஒப்பனைப் பொருட்களின் உற்பத்தி, இறக்குமதி மற்றும் நுகர்வு ஆகியவற்றை ஒழுங்குபடுத்தும் நோக்கத்துடன் 2023 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க ஒப்பனை மற்றும் அழகுசாதனத் தயாரிப்புக்கள் சட்டத்தை அண்மையில் இயற்றியது. இச்சட்டம் தனிநபர்களையும் வளாகங்களையும் சோதனை செய்யும் அதிகாரம் பெற்ற மத்திய ஒப்பனை ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினை (CCRA) நிறுவியது. மேலும், சட்டத்தின் பிரிவு 3: "ஒரு மில்லியனுக்கு ஒரு பங்கு (one part per million (PPM)) என்பதை விஞ்சும்

பாதரசச் (mercury) செறிவுகளை உள்ளடக்கும் வெண்மையாக்கும் களிம்பினை (whitening cream) இறக்குமதி செய்தல், தயாரித்தல், களஞ்சியப்படுத்தல், உடமையில் வைத்திருத்தல், விற்பனை செய்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் குற்றமாவதுடன் அது ஆறு மாதங்கள் வரை நீடிக்கக்கூடியதொரு கடூழிய மறியல் தண்டனையாலோ அல்லது இரண்டு இலட்சம் அபராதத்தினாலோ, அல்லது இவை இரண்டுமாலோ தண்டிக்கப்படக்கூடியது." எனக் கூறுகின்றது.

தீனாஸ் பியூட்டி சீக்ரெட்ஸின் (Teena's Beauty Secrets) உரிமையாளரான தீனா என்பவள், வீட்டில் உற்பத்தியாகும் வெண்மையாக்கும் இரவுக் களிம்புகளை தயாரிப்பதற்காக வெளிநாட்டிலிருந்து சேர்மானப் பொருட்களை இறக்குமதி செய்வதுடன், அச்சேர்மானப் பொருட்களின் பாதரசச் செறிவு மூன்று PPM இனை விடவும் அதிகமாக இருந்தது. தீனாஸ் பியூட்டி சீக்ரெட்ஸின் முகவர் ஒருவனான அனில் என்பவன், சில்லறை விற்பனைக்காக தீனாவின் வெண்மையாக்கும் இரவுக் களிம்புகளில் ஐம்பது பொதிகளை களஞ்கியப்படுத்தி வைத்தான். அனிலின் கடையின் வழக்கமான வாடிக்கையாளர் ஒருத்தியான கமலா என்பவள், அழகுசாதனப் பொருட்களை வாங்கச் சென்றாள். அனிலின் பரிந்துரையால் உந்தப்பட்ட கமலா, தீனாவின் வெண்மையாக்கும் இரவுக் களிம்புப் பொதிகள் இரண்டை வாங்கினாள். இதற்கிடையில், முறைப்பாடுகள் சிலவற்றுக்கான நடவடிக்கையின்போது, CCRA அதிகாரிகள் அனிலின் கடைக்குள் நுழைந்ததுடன் வளாகத்தில் தீனாவின் வெண்மையாக்கும் இரவுக் களிம்புப் பொதிகள் பலவற்றைக் கண்டுபிடித்தனர். அதிகாரிகள் கமலாவின் கைப்பையை சோதனை செய்தபோது அதே அழகுசாதனப் பொருட்களின் இரு பொதிகளையும் கண்டுபிடித்தனர். CCRA ஆனது தீனா, அனில் மற்றும் கமலா ஆகியோருக்கு எதிராக ஒப்பனை மற்றும் அழகு சாதனப் பொருட்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்க எண்ணுகின்றது. சம்பந்தப்பட்ட தரப்பினரின் குற்றவியல் பொறுப்புடைமையை ஆராய்க.

(30 புள்ளிகள்)

03. (அ) மற்றும் (ஆ) ஆகிய **<u>இரண்டுக்கும்</u>** விடை தருக.

(அ) இலங்கையினது குற்றவியல் சட்டத்தில் தண்டனையின் முதன்மைக் குறிக்கோள்களை விவரிப்பதுடன், இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட சீர்திருத்த வழிமுறைகள் (correctional methods) மூலம் இக்குறிக்கோள்கள் எவ்வாறு அடையப்படுகின்றன என்பதையும் ஆராய்க.

தண்டனை மற்றும் மற்றும் தண்டனைத்தீர்ப்பு பற்றிய பொருத்தமான கோட்பாடுகளுடன் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(15 புள்ளிகள்)

(ஆ) *"எத்தனம் ஒன்று தண்டனைக்குரியதாகக் கருதப்படுகின்றது, ஏனெனில் ஒவ்வொரு எத்தனமும், அதன் இலக்கை அடையவில்லையெனினும் அது தானாகவே ஊறொன்றாக இருக்கின்றமையால், எச்சரிக்கையை உண்டாக்குததால் வேண்டும், அத்துடன் தவறாளரின் தார்மீகக் குற்றமானது அவர் அதனைப் புரிவதில் வெற்றியடைந்திருந்தால் உண்டாகும் நிலைக்குச் சமமானதாகும்... அந்தச் செயலைச் செய்ததைப் போல ஊறு பெரிதாக இல்லாததால், பாதியளவு தண்டனை மட்டுமே வழங்கப்படுகின்றது."* – Arijit Pasayat, J. in ***Aman Kumar and Another v. State of Haryana*** (2004) 4 SCC 379.

மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? இலங்கையின் பொருத்தமான சட்ட அதிகார ஆதாரங்களுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

(15 புள்ளிகள்)

(15x2 = 30 புள்ளிகள்)

04. டேவிட் வெலிங்டன் என்பவனினதும் அவனது மனைவி மற்றும் இரண்டு மகன்களின் கருகிய உடல்கள் முழுமையாக எரிந்த அவர்களது வீட்டில் கண்டெடுக்கப்பட்டன. ஜேம்ஸ் டைன், அவனது மனைவி மேரி மற்றும் அவர்களது ஐந்து மகன்களும் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்டிருந்தனர். வெலிங்டன் மற்றும் டைன் குடும்பத்தினர் இருவரும் ஆதனத் தகராறொன்று தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் வாக்குவாதம் செய்வதையும் ஒருவரையொருவர் அச்சுறுத்துவதையும் காணக்கூடியதாக இருந்தது. ஜேம்ஸ் டைனும் அவரது மனைவியும் உரிமம் இல்லாத துப்பாக்கியொன்றை வாங்கி, வெலிங்டன் குடும்பத்தை கொன்று அவர்களது வீட்டை எரிக்கவும் பல கொள்கலன்களில் பெற்றோலை (gasoline) சேமித்து வைத்திருந்தனர். ஜேம்ஸோ அல்லது மேரியோ தமது ஐந்து மகன்களிடம் அவர்களது திட்டங்களைச் சொல்லியிருக்கவில்லை, ஆனாலும், ஐந்து மகன்களும் அவர்களின் பெற்றோருக்குத் தெரியாமல் டைன் குடும்பத்தின் இரண்டு மகன்களையும் தாக்க திட்டமிட்டனர். குற்றம் நடந்த அன்றிரவு, இரு குடும்பத்தாரின் மகன்களுக்கும் இடையே சண்டை வெடித்ததோடு அதில் பெற்றோரும் ஈடுபடலாயினர். டேவிட் தனது மகன்களுக்கு உதவ விரைந்தபோது, ஜேம்ஸ் தனது துப்பாக்கியை எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு வந்தான். ஜேம்ஸின் மகன்களில் ஒருவன் தனது தந்தையின் துப்பாக்கியைப் பறித்து, டேவிட் படுகாயமடையும் வண்ணம் பல முறை

சுட்டான். டேவிட்டின் குடும்பம் தங்களது வீட்டிற்குத் பின்வாங்கிச் சென்றனர். "தன் மனதைத் தான் மாற்றிக்கொண்டதால்" அவர்களைக் கொல்ல வேண்டாம் என்று மேரி வேண்டிக்கொண்ட போதிலுங்கூட, அவர்களின் ஐந்து மகன்களுக்குத் தெரியாமல், ஜேம்ஸ் தான் சேகரித்து வைத்த பெற்றோலினைப் பயன்படுத்தி, டேவிட்டின் வீட்டிற்கு தீ வைத்தான்.

இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்களத்தின் வழக்குத்தொடுநர் குழுவில், நீர் ஒரு வழக்கறிஞராக உள்ளீர் எனக் கருதிக்கொள்க. டைன் குடும்பத்தின் ஏழு உறுப்பினர்கள் மீது குற்றவியல் பொறுப்புடைமையைச் சுமத்த அவர்களின் பங்கேற்பு முறைகளை **மட்டும்** சுட்டிக்காட்டி பொது உளக்கருத்து, அதே எண்ணம், சதித்திட்டம் அல்லது எத்தனம் என்பன குறித்த தண்டனைச் சட்டகோவைப் பிரிவுகள் மற்றும் வழக்குச் சட்டம் என்பவற்றைத் தொடர்புறுத்தி எத்தகைய அணுகுமுறையை நீர் கைக்கொள்வீர் என விளக்குக.

(30 புள்ளிகள்)

***